

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 மே 16, 2019 புரட்சி 18 முழக்கம் 18 விலை: ரூ.3.00

# 7 தமிழர் விடுதலை – நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதி – இடஒதுக்கீட்டில் பதவி உயர்வு

தலையங்கம்

# உச்சநீதிமன்றத்தின் பாராட்டத்தக்கத் தீர்ப்புகள்

***உச்சநீதிமன்றம் அண்மையில் வெளியிட்டுள்ள இரண்டு தீர்ப்புகளும் நீதிபதிகள் நியமனம் தொடர்பான அறிவிப்பும் பாராட்டி வரவேற்கப்பட வேண்டியதாகும்.***

முதலில் 7 தமிழர் விடுதலை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பைக் குறிப்பிட வேண்டும். இராஜீவ் கொலையில் நேரடி தொடர்பில்லாத மறைமுக உதவி செய்ததார்கள் என்ற குற்றச்சாட்டில் பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் என்ற ஏழு தமிழர்கள் 28 ஆண்டுகளாக சிறையில் வாடி வருகிறார்கள். இதில் 3 பேர் தூக்குத் தண்டனையிலிருந்து ஆயுள் தண்டனையாக தண்டனைக் குறைப்புக்கு உள்ளானோர். இப்போது அனைவருமே தண்டனை அனுபவித்து வரும் சிறைவாசிகள். சிறைவாசிகளை தண்டனைக் குறைப்பு செய்து விடுதலை செய்யும் உரிமையை அரசியல் சட்டம் மாநில அரசுகளுக்கு 161ஆவது விதியின் கீழ் வழங்கியுள்ளது. இவர்கள் சி.பி.அய். என்ற மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்கு உள்ளானவர்கள் என்பதால் மாநில அரசு இவர்களை விடுதலை செய்ய முடியாது என்று மத்திய காங்கிரஸ் ஆட்சி கூறி வந்தது. மூவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியதோடு அவர்களை விடுதலை செய்ய மாநில அரசு விரும்பினால், அதன்படி முடிவெடுக்கலாம் என்றும் கூறியது. உடனடியாக அப்போது தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, அமைச்சரவையைக் கூட்டி ,7 தமிழர்களை விடுதலை செய்யும் முடிவை அறிவித்தார்.

அப்போது மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் ஆட்சி, தமிழக அரசு முடிவை எதிர்த்து ஒரே நாளில் உச்சநீதிமன்றம் போய் தமிழக அரசுக்கு உரிமையில்லை என்று கூறி தடை வாங்கியது. பிறகு உச்சநீதிமன்ற அமர்வு இது குறித்து ஆராய்ந்து, மத்திய அரசு புலனாய்வு செய்த வழக்கில் விடுதலை செய்யும் உரிமை மத்திய அரசுக்கே உண்டு என்று கூறியதோடு, குறிப்பாக இந்த 7 தமிழர் விடுதலை குறித்து வேறு ஒரு அமர்வு விசாரிக்கலாம் என்று கூறி விட்டது. இதற்காக நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான 3 பேர் கொண்ட அமர்வு நியமிக்கப்பட்டது. அது தனது தீர்ப்பில் மாநில அரசு இந்த 7 பேர் விடுதலையை மாநில அரசுக்குரிய 161ஆவது பிரிவைப் பயன்படுத்தி விடுதலை செய்யத் தடையில்லை என்று அறிவித்தது. அதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை 7 தமிழர் விடுதலைக்கு பரிந்துரைத்து, தமிழக ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பியது. அமைச்சரவை முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டேயாக வேண்டும் என்று ஏற்கனவே பல உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தாலும் ஆளுநர் அதைப் பற்றிக் கவலைப் படாமல் மத்திய அரசின் உத்தரவுப்படி கோப்பைக் கிடப்பில் போட்டுவிட்டார்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாகக் காரணம் கூறப்பட்டது. இப்போது கடந்த மே 9, 2019 அன்று 7 தமிழர் விடுதலைக்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் வழக்கை ஒத்தி வைப்பதாகக் கூறியபோது பேரறிவாளன் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சங்கர சுப்பிரமணியன், பிரபு இராமசுப்பிரமணியன் ஆகியோர் உடனடியாகக் குறுக்கிட்டு, 2014ஆம் ஆண்டிலிருந்து வழக்கு நிலுவையில் இருப்பதால் சிறைவாசிகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதை எடுத்துக்காட்டினர். இந்த வழக்கு மனுவில் பாதிக்கப்பட்டோரின் கருத்துகளைக் கேட்டு அவர்களும் வழக்கில் இணைக்கப்படாததால் இது சட்டப்படி செல்லத் தக்க மனுவும் அல்ல என்று கூறி வாதிட்டனர். உடனே தலைமை நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், தீபக் குப்தா, சஞ்சய் கன்னா ஆகியோரடங்கிய அமர்வு எதிர்ப்பு மனுவைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்ததோடு இந்த வழக்கு தொடர்பான அனைத்து சட்ட அம்சங்களையும் ஏற்கனவே உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்திவிட்டதால், இனி நீதிமன்றத்திடம் கருத்து கேட்க ஏதும் இல்லை என்றும் திட்டவட்டமாக அறிவித்ததோடு, பிரச்சினை மாநில ஆளுநருக்கும் 7 சிறைவாசி களுக்கும் இடையில்தான் இருக்கிறது என்றும் கூறிவிட்டனர். இதற்குப் பிறகும் தமிழக ஆளுநர் என்ன செய்யப் போகிறார் என்பது இப்போது கேள்வியாக எழுந்து நிற்கிறது.

**உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனம் : கொலிஜியம் சரியான பார்வை**

உச்சநீதிமன்றத்தின் மற்றொரு முக்கிய முடிவு மிகவும் பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையிலான மூத்த நீதிபதிகளைக் கொண்ட ஒரு குழு, நீதிபதிகளைத் தேர்வு செய்து வருகிறது. இந்தக் குழுவுக்கு கொலிஜியம் என்பது பெயர். இந்தக் ‘கொலிஜிய’ முறை நீக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நடுவண் ஆட்சியே நீதிபதிகளைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்து நீண்டகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. உச்சநீதிமன்றத்தின் பார்ப்பன உயர்ஜாதிப் பார்வையில் நீதிபதிகள் நியமனம் நடக்கும்போது கொலிஜியம் முறையை எதிர்க்க வேண்டியிருக்கிறது. நடுவண் ஆட்சி - சமூக நீதி அடிப்படையில் நீதிபதிகளைத் தேர்வு செய்தால் அதை ஆதரிக்கவே வேண்டும். இதுவே பல நேரங்களில் தலைக்கீழாக நடப்பதும் உண்டு. மோடி ஆட்சி பதவிக்கு வந்தவுடன் ‘கொலிஜியம்’ தேர்வு முறைக்கு எதிராக சட்டம் கொண்டு வந்தது. அதை உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது. நீதிபதிகள் நியமனங்களில் மோடி ஆட்சி வழக்கம்போல் தனது ‘இந்துத்துவ’ கண்ணோட்டத்தில் செயல்பட்டு வந்ததால் பல நேரங்களில் உச்சநீதிமன்றத்துக்கும் நடுவண் அரசுக்கும் முரண்பாடுகள் வெடித்து வருகின்றன. இதற்கு பல சான்றுகளைப் பட்டியலிட முடியும்.

இப்போது உச்சநீதிமன்றத்தில் மொத்தமுள்ள 31 நீதிபதிகள் பதவிகளையும் முழுமையாக நிரப்பிட முடிவு செய்த கொலிஜியம், நான்கு நீதிபதிகள் பெயர்ப் பட்டியலை மத்தியக் குழு அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. ஜார்க்கண்ட் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அனிருதா போஸ், கவுகாத்தி உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ். போபண்ணா ஆகிய இரு நீதிபதிகளைக்க கொலிஜியம் பரிந்துரைத்தது. இந்தப் பட்டியலை ஏற்க முடியாது என்று மோடி ஆட்சி திருப்பி அனுப்பிவிட்டது. மோடி ஆட்சி இதற்குக் கூறிய காரணம் இந்த நீதிபதிகளின் மாநிலங்களைச் சார்ந்தவர்கள் ஏற்கனவே உச்சநீதி மன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறார்கள் என்பதாகும். கொலிஜியம் இதை ஏற்க மறுத்து மீண்டும் அதே இரண்டு நீதிபதிகள் பட்டியலை இவர்கள் ‘நேர்மையானவர்கள் திறமையானவர்கள்’ என்று கூறி மீண்டும் நடுவண் ஆட்சிக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அத்துடன் மேலும் இரண்டு கூடுதல் நீதிபதி களையும் பரிந்துரைத்துள்ளது. ஒருவர் மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியான பி.ஆர். கவாய். இவர் மும்பை உயர்நீதிமன்ற நீதிபதிகள் சீனியாரிட்டியில் 4ஆவது இடத்தில் இருந்தாலும் இவரைத் தேர்வு செய்வதற்கான காரணம் ‘தலித்’ சமூகத்திலிருந்து வந்துள்ள நீதிபதி என்று கூறியுள்ள கொலிஜியம், உச்சநீதிமன்றத்தில் கடந்த 15 ஆண்டுகளாக நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றதற்குப் பிறகு தலித் பிரநிதித்துவமே இல்லை என்பதை ‘கொலிஜியம்’ சுட்டிக்காட்டுகிறது. பி.ஆர். கவாய் நீதியாக்கப் பட்டால் 2025 மே 13 முதல் அவர் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக முடியும் என்றும் கொலிஜியம் கூறியிருக்கிறது.

பரிந்துரை செய்யப்பட்டுள்ள மற்றொரு நீதிபதி ஹிமாச்சல மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக உள்ள சூர்யகாந்த். இவர் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. “சீனியாரிட்டி இல்லை; மாநில பிரதிநிதித் துவம் பாதிக்கப்படுகிறது” என்பது நடுவண் ஆட்சியின் வாதமாக இருக்கும்போது அவற்றைப் புறந்தள்ளி சமூகநீதிப் பார்வையை முன்னிறுத்து கிறது கொலிஜியம் “இந்தப் பரிந்துரைகள் வழியாக அனைத்து உயர்நீதிமன்றங்களிலும் உச்சநீதி மன்றங்களிலும் பட்டியல் / பழங்குடியினர் - மைனாரிட்டியினர் - பிற்படுத்தப்பட்டோர் - பெண்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினருக்கும் உரிய பிரதிநிதித்துவத்தை இயன்ற அளவு தந்தாக வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தப் பட்டியல் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்று தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான கொலிஜியம் கூறியிருக் கிறது.

மூன்று சீனியர் நீதிபதிகளைத் தாண்டி நான்காவது இடத்தில் உள்ள ஒரு தலித் நீதிபதியை உச்சநீதி மன்றத்துக்குத் தேர்வு செய்திருக்கிறோம் என்றால் மூன்று மூத்த நீதிபதிகளும் திறமையற்றவர்கள் என்பது அர்த்தமல்ல. மாறாக ‘தலித்’ பிரதிநிதித்துவம் உச்சநீதிமன்றத்தில் இருக்க வேண்டும் என்பதே நோக்கம் என்றும் கொலிஜியம் தெரிவித்துள்ள கருத்து பாராட்டி வரவேற்கப்பட வேண்டியதாகும். சமூக நீதியை நுணுக்கமாக ஆராய வேண்டியதன் அவசியத்தை கொலிஜியம் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பதையே இது உணர்த்துகிறது.

**பதவி உயர்வில் இடஒதுக்கீட்டுக்கு உச்சநீதிமன்றம் ஆதரவு**

உச்சநீதிமன்றம் கடந்த மே 10, 2019 அன்று பட்டியலின - பழங்குடியினருக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் சரியான சட்டமே என்ற மற்றொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பையும் வழங்கியிருக்கிறது. இந்த நோக்கத் துக்காக கருநாடக மாநில அரசு கெண்டு வந்த சட்டத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை நீதிபதிகள் யு.யு. லலித் மற்றும் டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது. இந்த சட்டத்தினால் ஏனைய பிரிவினரின் பணி மூப்பு அடிப்படையிலான பதவி

4ஆம் பக்கம்

## வேத கலாச்சாரத்துக்கு உயிரூட்டும் தமிழக அரசு

தமிழ்நாட்டில் மழை பெய்வதற்காக யாகங்கள் – வருண பகவானை வேண்டும் வேதச் சடங்குகள் – மழை பெய்விப்பதற்கான அமிர்த வர்ஷினி இசை நிகழ்ச்சிகளை நடத்துமாறு அற நிலையத் துறை உத்தரவிட்டுள்ளது. சிண்டைத் தட்டி விட்டுக் கொண்டு பூணுலை உருவிக் கொண்டு புரோகிதர் கூட்டம் ஒவ்வொரு கோயிலாக யாகம் நடத்தக் கிளம்பிவிட்டது. மழை கொட்டப் போகிறதோ இல்லையோ, புரோகிதக் கூட்டத்துக்கு வருமானம் மழையாகக் கொட்டத் தொடங்கிவிட்டது.

வேத காலத்தில் பார்ப்பனர்கள் ‘வானுலக தேவர்களை’ மகிழ்விக்கிறோம் என்று மக்களை ஏமாற்றி உருவாக்கிய வேத சடங்குகள் 2019ஆம் ஆண்டிலும் மதச்சார்பற்ற ஆட்சி நடத்த வேண்டிய அரசுகளால் அங்கீகரிக்கப்பட்டு அதற்கு அரசு நிதியே செலவிடப்படுகிறது என்றால் நாட்டின் பண்பாட்டு – அரசியல் ஆதிக்கம் இப்போதும் பூதேவர்களாகிய பார்ப்பனர்களிடமே இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ‘தமிழர் கலாச்சாரம்’, ‘தமிழர் பண்பாடு’ – தமிழர் அடையாளத்தைக் காப்பாற்ற வந்திருக்கிறோம் என்று கிளம்பி மேடைதோறும் ‘வீர வசனங்களைப்’ பேசி வரும் ‘சுத்த சுயம் பிரகாசத்’ தமிழர்கள் இந்தப் பார்ப்பன சடங்குகள் பற்றி எந்த ஒரு எதிர்ப்புக்கூட தெரிவிக்கவில்லை. பெரியார் இயக்கங்கள் மட்டுமே இதை எதிர்த்து வருகின்றன.

மற்றொரு செய்தியையும் குறிப்பிட வேண்டும். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்நாடு அரசு ‘தமிழ் அன்னை சிலை’ வைப்பதற்கு ஏற்பாடுகளை செய்து வருகிறது. மொழியை பாலின அடையாளத்துக்கு உள்ளாக்கி, அதை சிலையாக்கி வழிபடும் தெய்வமாக மாற்றுவது என்பதெல்லாம் தமிழுக்கோ தமிழருக்கோ பெருமை சேர்ப்பது ஆகாது. தமிழை அறிவியல் மொழியாக வளர்த்தெடுக்கவும், தமிழ் வழிக் கல்வியைப் பரப்புவதற்கான ஆக்கபூர்வ முயற்சிகளைத் திட்டமிட்டு செயல்படுத்துவதும், அதை நோக்கி மக்கள் ஆதரவை த் திரட்டுவதும், தமிழ் வழியில் படித்தால் எதிர்கால வாழ்க்கைக்கான உறுதிப் பாட்டை உருவாக்குவதுமே தமிழுக்கும் தமிழர்களுக்கும் ஆற்றும் உண்மையான தொண்டு.

இப்போது அந்தத் தமிழ் அன்னைச் சிலையை வடிவமைப்பதிலும் வேதகால பார்ப்பனியம் நுழைந்துவிட்டது. இந்த சிலை அமைக்கும் பொறுப்பை ஏற்றிருப்பது ‘பூம்புகார்’ என்ற அரசு நிறுவனம். சிலை அமைப்புக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள இந்த அரசு நிறுவனம், “தமிழ் அன்னைக்குப் பளிங்குக் கற்கள், ஃபைபர் போன்றவற்றிலும் **வேதகால முறைப்படியும்** சிலை செய்யலாம்” என்று அறிவித்திருக்கிறது. வேதகால பிராமண முறைப்படி (Vedic Brahminism) சிலை செய்யப்பட வேண்டும் என்று அரசு நிறுவனமான பூம்புகார் அதற்கான ஒப்பந்தப் புள்ளியில் (டெண்டர்) குறிப்பிட்டுள்ளது.

சிலைகள் வடிவமைப்பதில் உலகப் புகழ் வாழ்ந்த தமிழர்களான சிற்பிகள் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். “கல் சிற்பங்களுக்கு பெயர் போன தமிழ்நாட்டில், உலகம் முழுதும் சென்று சிற்பங்களை வடித்துத் தரும் கல் சிற்பிகள் நிறைந்துள்ள தமிழ்நாட்டில் இப்படி ஒரு அறிவிப்பு தமிழர் சிற்பக் கலையை அவமதிக்கிறது என்று மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி பேராசிரியர்கள் மனம் குமுறி இருக்கிறார்கள்.

ஃபைபர், பளிங்குகளில் சிலை செய்வதற்கு வடநாட்டுக்காரர்களையே இறக்குமதி செய்ய வேண்டும். தமிழ்நாட்டு சிற்பக் கலைஞர்களுக்கு ‘பைபரிலும், பளிங்குகளிலும்’ சிலை செய்யத் தெரியாது; கல்லில் சிலை வடிவமைப்பதே தமிழர் மரபு என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது பற்றிய விரிவான பேட்டிகளை ‘ஜூனியர் விகடன்’ (15.5.2019) இதழ் வெளியிட்டிருக்கிறது. தமிழக அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள மாஃபா பாண்டியராஜன் என்ற ஆர்.எஸ்.எஸ். பேர்வழி, ‘பளிங்கு மற்றும் பைபர் சிலையும் வேதமரபும்’ தமிழ்க் கலாச்சாரம் தான் என்று நியாயப்படுத்தியிருக்கிறார்.

வேத காலத்தில் தொடங்கிய பார்ப்பனிய கொடுங்கோல் ஒடுக்குமுறை இப்போதும் தொடருகிறது; தமிழ்நாட்டிலேயே இந்த நிலையா? அதுவும் தமிழ்த் தாய்க்கான சிலை வேத பார்ப்பனிய முறையில் அமைப்பது தமிழுக்கு அவமானம் இல்லையா?

தமிழைப் பழிக்கும் வேத-பார்ப்பன சடங்குகளை எதிர்ப்பதற்கு ‘நாங்களே தமிழருக்கான போராளிகள்’ என்று உரிமை கோரும் இயக்கங்கள் ஏன் வாயை மூடிக் கொள்கின்றன?



## எர்ணாகுளம் நாத்திகர் மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேச்சு

# மத உணர்வாளர்கள் – மதவெறி வன்முறையைக் கண்டித்துக் குரல் எழுப்ப முன்வரவேண்டும்



11-5-2019அன்று எர்ணாகுளத்தில் ‘யுக்திவாத பாடன கேந்திரத்’தின் மாநில மாநாடு 2019, மே மாதம், 11,12 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இது கடவுள் – மதம் – ஜாதியை மறுக்கும் நாத்திக அமைப்பு.

முதல் நாள் நிகழ்ச்சிகள் அமைப்பின் தலைவர் ஜார்ஜ் தலைமையில் தொடங்கின. தொடக்க உரையைப் பேராசிரியர் கே.எஸ். பகவான் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து நரேந்திர தபோல்கர் உருவாக்கிய ‘மகாராஷ்டிர அந்தாஷ்ரத்த நிர்மூலன் சமிதி’க்கு, 2018ஆம் ஆண்டின் பகுத்தறிவுத் துறையில் ஆற்றிய சிறந்த பணிகளுக்கான விருது வழங்கப் பட்டது.

பரிசு பெற்ற அமைப்பினை வாழ்த்தியும், தமிழ்நாட்டில் பெரியாரின் பணிகளை விளக்கியும், தோழர் பாரூக்கைக் கொன்றொழித்த இஸ்லாமிய மதவெறிப் போக்கு தமிழகத்தில் உருவாகியுள்ள சூழலை விளக்கியும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசினார். சிறப்பு விருந்தினர்களுக்கு ‘ரிவோல்ட்’ ஆங்கில இதழ் தொகுப்புகளை வழங்கினார்.

கேரளா, எர்ணாகுளம் பகுத்தறிவாளர் கழகம் நடத்திய தேசிய மாநாடு மற்றும் சரவாகம் 11-05-2019 அன்று நடைபெற்றது. அதில் கழகத் தலைவர் கலந்து கொண்டு தனது உரையை மத உணர்வாளர்கள் - மத வெறி வன்முறையைக் கண்டித்துக் குரல் எழுப்ப முன் வரவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (உரை பின்னர்)

## கழகத் தலைமைக் கழகத்தைத் தக்கவைக்க ஆர்வத்துடன் நிதி குவிக்கும் தோழர்கள்

கழகத் தோழர்களே!

தலைமைக் கழகத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் கட்டமைப்பு நிதி திரட்டும் களப் பணியை தொடங்கி விட்டீர்களா?

அதற்கான துண்டறிக்கை – நன்கொடை ரசீதுகள் – தோழர் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கழகப் பொறுப்பாளர்கள், தோழர்களைச் சந்திக்க வருகிறார்கள்.

தோழர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நிர்ணயிக்கப் பட்டுள்ள இந்த ரூ.20,000/- நன்கொடை திரட்டும் இயக்கத்தில் தோழர்கள் ஆர்வம் காட்டி வருவது நமக்கு நல்ல நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது. அறிவித்த சில நாட்களிலே சில தோழர்கள் ரூ.20,000/- நன்கொடையை வழங்கியிருப்பதையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம். கடந்த இதழ்த் (9.5.2019) தொடர்ச்சி:

| | | |
|---|---|---|
| திருவெறும்பூர் அரசெழிலன் (மாதவன் மென்பொருள் அங்காடி) | – ரூ. | 20,000/- |
| டாக்டர் சக்திராஜன் | – ரூ. | 20,000/- |
| டாக்டர் நவீன் | – ரூ. | 10,000/- |
| டாக்டர் சிவபாலன் | – ரூ. | 5,000/- |
| டாக்டர் மோகன்ராஜ் | – ரூ. | 3,000/- |
| திருநாவுக்கரசு | – ரூ. | 5,000/- |
| செம்மொழி | – ரூ. | 5,000/- |
| கார்த்திகேயன் | – ரூ. | 4,000/- |
| அருண் | – ரூ. | 6,000/- |
| பெர்னாட்ஷா | – ரூ. | 3,000/- |
| இனிமை | – ரூ. | 2,000/- |

(பட்டியல் பெருகட்டும்)

# தமிழ் இலக்கியம் குறித்த பெரியார் பார்வை தவறா? (2)

*பாவலர் தமிழேந்தி தொகுத்த 'திராவிடம், பெரியாரியம் இன்றும் தேவையே' நூலில் 'பெரியாரும் தமிழ் இலக்கியமும்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' அவர் நினைவாகப் பதிவு செய்கிறது. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

மதுரையை எரிக்கக் கண்ணகிக்குப் பயன்பட்ட தீக்கடவுள்கூடப் பார்ப்பனக் கோலத்தில் (பால்புரை வெள் எயிற்றுப் பார்ப்பான் கோலத்து) தோன்றித்தான் புகார் நகரத்தை எரித்ததாக இளங்கோவடிகள் இசைக்கின்றார்.

இவ்வாறு, விரிவாக இலக்கியங்களில் இருந்து மேற்கோள்கள் காட்டி எழுதுவதற்கான காரணம் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று காய்ந்த பெரியாரின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குத்தான். தமிழை எல்லா வகையிலும் கடவுளோடும் கற்பனைப் புராணங்களோடும் புனைந்துவிட்ட பொய்க் கதைகளைக் கண்டு பெரியார் பொங்கினார். உயர்ந்த மொழி என்று சொல்லப்படும் தமிழ், கோயிலுக்குள் நுழைய முடியாத நீச மொழியாக உரிமை மறுக்கப்படுகின்றதே என உளங்கொதித்தார்.

நம்மால் - நம் பணத்தால் - நம் உழைப்பால் கட்டப்பட்ட கோயிலுக்குள் இன்றைக்கும் நம்மை உள்ளே போகக் கூடாது, தொடக்கூடாது என்கின்றானே! உன் மொழி - முதலை உண்ட பாலனை மீட்டது - சிவன் பேசியது - எலும்பைப் பெண்ணாக்கியது - பூட்டியக் கதவைத் திறந்தது என்றெல்லாம் பெருமை பேசுகிறாயே! அத்தகைய மொழியைக் கடவுளிடம் சொல்லக் கூடாது; அது நீசமொழி என்கின்றானே; அதைப் பற்றி எவன் சிந்தித்தான்; வெட்கப்பட்டான்.

தமிழரைக் காட்டுமிராண்டி என்றேன் என்று படித்தவன், அரசியலில் உள்ளவன் கோபிக்கிறானே? உன்னுடன் உள்ளே (கர்ப்பக்கிரகத்தினுள்) விடமாட்டேன் என்கிறானே. இதற்கு என்ன செய்தாய்? இன்னமும் சொல்கிறேன்.

உன்சாமி காட்டுமிராண்டி சாமி
உன்மதம் காட்டுமிராண்டி மதம்
உன்மொழி காட்டுமிராண்டி மொழி
உன் இலக்கியங்கள் காட்டுமிராண்டி
இலக்கியங்கள்.

- 'விடுதலை' 14.4.1967

தமிழ் இலக்கியங்கள் மேல் பெரியார் கொண்ட கடுஞ்சினத்திற்குக் காரணம் என்ன? பார்ப்பனர்களை உயர்த்திப் பேசும் சங்கப் பாடல்களிலேயே இழிந்தோர், கடைசியர், அடியோர் என்ற சொற்களும் இடம் பெற்றுவிட்டனவே!

ஐந்திணைக்குரிய தலைமக்களைப் பற்றிக் கூறும் தொல்காப்பியம் அதன் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணைக்குரிய மக்களைப் பற்றிப் பின்வருமாறு பேசுகிறது:

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரையில புறத்து என்மனோர் புலவர்"

- தொல். அகத். 23

இங்கு அடியோர் என்பவரைப் பிறர்க்குக் குற்றேவல் செய்வோர் எனவும் வினைவலர் என்பரைப் பிறர் ஏவிய தொழிலைச் செயல் வல்லோர் என்றும் நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார். பொருளியல் மேன்மையும், சமூக மதிப்பும் கொண்டோர் ஒருபுறமும், அவர்க்கு அடிமைத் தொழில் புரிவோர் மறுபுறமும் அக்காலத்தில் இருந்துள்ளனர் என்பதை இதனால் அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்கள் பலவற்றில் துடியர், பறையர் என்போர் பேசப்பட்டுள்ளனர். 'துடி', 'பறை' என்பன தோற்கருவிகள். அவற்றை இயக்குவோர் அப்பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர் என்ற போதிலும், 'இழிசனர்', 'புலையன்' என்கிற சொல் லாட்சிகளும் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

"பூக்கோள் இன்று என்று அறையும்
மடிவாய்த் தண்மை இழிசினன் குரலே"

- புறம் 289

"புலையன்
பேழ்வாய்த் தண்ணுமை இடந்தொட்டன
அருவி இழிதரும் பெருவரை நாடன்"

- நற்றிணை 345

இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்நிலையை எதிரொலிக்கும் கண்ணாடிகள் என்கிறோம். அந்தக் கண்ணோட்டத்தில் இவற்றை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். மரபின் பெருமை பேசுதலில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் அதன் மறுபக்கத்தையும் கணக்கிலெடுத்து மானுட வரலாற்றை முன் நகர்த்த முனைய வேண்டும். இலக்கியங்கள் பற்றிய இந்த முன்னோக்கிய பார்வை பெரியாரிடம் இருந்தது.

## பாவலர் தமிழேந்தி



"தமிழர்கள் கடுகளவு அறிவும், தன்மானமும் உடையவர்களாக இருந்திருந்தால், இந்த நாட்டில் 2000, 3000 ஆண்டுகளாக இந்த நாட்டு மக்கள் - பழங்குடி மக்கள், கடைச்சாதியாய், இழி மக்களாய் இருந்திருக்க முடியுமா? எந்த அரசனாவது தானுட்பட - தன்னின் மக்கள் 100க்கு, 90க்கு மேற்பட்டவர்கள் கீழ் மக்களாய், இழி மக்களாய் இருக்கிறார்களே என்று சிந்தித்ததாகக் காணப்படுகிறதா? கோயில்களுக்கும், சத்திரங்களுக்கும், மடங்களுக்கும் அவற்றின் விழாக்களுக்கும், விளம்பரங்களுக்கும் விடப்பட்டிருக்கும் சொத்துக்களையும் - அதே நேரத்தில் இந்நாட்டு மக்களின் கல்வியறிவு பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்காதபடி விட்டிருக்கும் தன்மையையும் மற்றும் நம் நாட்டுக்கு நல்லறிவும் நல்லொழுக்கமும் புகுத்தப் பாடுபட்ட பவுத்தர்களையும் சமணர்களையும் வெட்டியும், சித்திரவதை செய்தும், கழுவேற்றியும் கொடுமை செய்த சரித்திரத்தையும் நடப்பையும் பார்த்தால் - நம் தமிழர்கள் ஆட்சி ஒரு கொடுங்கோன்மையும் காட்டுமிராண்டித்தனமும் கொண்ட ஆட்சி என்பதைத் தவிர வேறு என்ன ஆட்சி என்று சொல்ல முடியும்?" (15.8.1957 'விடுதலை' தலையங்கம்)

பழமையை எந்த மறு ஆய்வுக்கும் உட்படுத்த முன்வராத அக்காலப் புலவர்கள் மீது பெரியார்க்கு வருத்தமும் சினமும் இருந்ததில் வியப்பில்லை. தம் வாழ்வில் நிகழ்ந்த ஒரு நிகழ்வை அவரே வேடிக்கையாகப் பின்வருமாறு குறிப்பிடுவார்.

"புலவர் என்றால் சொந்தப் புத்தி இல்லாதவன், புளுகன் என்றுதான் உரை கூறுவேன். நா. கதிரைவேற்பிள்ளை என்கிற ஒரு தமிழ் வாயாடிப் புலவர் என்னிடம் வந்தபோது, ஒரு நிகழ்ச்சியில் புலவர்களுக்குப் பகுத்தறிவுக் கிடையாது என்பது என் கருத்து. அதை உங்களிடம் கண்டேன் என்று சொன்னதற்கு, உன்னிடம் வந்ததே தவறு என்று சொல்லி, என்னிடம் வாங்கிக் குடித்தப் பாலை விரலைவிட்டு வாந்தி எடுத்துவிட்டார்." ('விடுதலை' தலையங்கம் 16.3.1967, பெரியார் சிந்தனைகள் 3, 2, பக்கம் 1773)

பெரியார் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்றதும், தமிழ்ப் புலவர்கள் சொந்தப் புத்தி இல்லாதவர்கள் என்றதும் அவர் தமிழ்மொழி மீதும், தமிழ்ப் புலவர்கள் மீதும் கொண்ட வெறுப்பால் அல்ல. மூடநம்பிக்கைகளைக் கைக்கொண்டு வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தை எப்படியேனும் முன்னேற்றிவிட வேண்டும் என்கிற துடிப்பாலும் தாய் உள்ளத்தாலும் வெடித்த சொற்களுக்குத் தப்பான பொருள் கொள்வது தந்தை பெரியாரின் மாபெரும் மக்கள் தொண்டை மலினப்படுத்தும் செயலாகும். தமிழ்மொழி சிவபெருமானின் டமாரத்திலிருந்து வந்தது, அது அவன் மனைவி பார்வதியுடன் பேசிய மொழி என்றெல்லாம் கதை அளந்து கொண்டிராமல், தமிழை அறிவியல் மொழியாக வளர்த்தெடுத்துக் கடைத்தேற்றம் காண வேண்டும் என்பதே அவர் அவா ஆகும்.

"தமிழ் மொழி, ஆங்கில மொழி இரண்டைப் பற்றிய என்னுடைய கருத்தைப் பலமுறை சொல்லி இருக்கிறேன். ஆங்கிலம் வளர்ந்த மொழி என்பதும், தமிழ் வளர்ச்சி அடையாத பழங்கால மொழி என்பதும் என்னுடைய மதிப்பீடாகும். இதை நான் சொன்னதற்கு முக்கிய நோக்கம் தமிழ் மொழி - ஆங்கில மொழி அளவுக்கு விஞ்ஞான மொழியாகவும் பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பதுதானே தவிர தமிழ் மீது எனக்குத் தனி வெறுப்பில்லை." ('விடுதலை' 1.12.1970)

இப்படித் திட்டினாலாவது அதைக் கேட்டு உணர்ச்சி பெற்ற ஒற்றிரண்டு புலவர்கள் தமிழுக்குத் தங்களாலான ஆக்க நிலைப் பங்களிப்பைத் தர முன் வரமாட்டார்களா என்கிற ஏக்கம் பெரியாரிடம் இருந்தது. அந்த ஏக்கம் அவருடைய சொற்களாலேயே வெளிப்பட்டது.

> "நா. கதிரைவேற்பிள்ளை என்கிற ஒரு தமிழ் வாயாடிப் புலவர் என்னிடம் வந்தபோது, ஒரு நிகழ்ச்சியில் புலவர்களுக்குப் பகுத்தறிவுக் கிடையாது என்பது என் கருத்து. அதை உங்களிடம் கண்டேன் என்று சொன்னதற்கு, உன்னிடம் வந்ததே தவறு என்று சொல்லி, என்னிடம் வாங்கிக் குடித்தப் பாலை விரலைவிட்டு வாந்தி எடுத்துவிட்டார்."
> - பெரியார்

"இந்தப்படி நான் எழுதுவதைப் பற்றி ரோஷப்பட்டு எந்தப் புலவராவது திருந்தி, கந்தபுராண மறுப்பு, இராமாயண, பாரதத்துக்கு மறுப்பு, சிலப்பதிகாரத்துக்கு மறுப்பு மற்றும் இலக்கியங்களுக்கு மறுப்பு அல்லது ஆராய்ச்சி நூல் என்னும் பெயரால் பகுத்தறிவாளர்கள் ஏற்கும்படி 100 - 200 பக்கங்களில் அடங்கும்படி புத்தகங்கள் எழுதித் தருவார்களேயானால் வரவேற்பதோடு, சன்மானங்களும் தந்து பாராட்டு விழாக்களும் நடத்தப்படும். அவை அச்சுப் புத்தகமாக்கப்படுமானால் 100க்கு 100 புத்தகங்கள், சன்மானமாகக் கொடுக்கப்படும். இப்போதைய புலவர்கள் பலரின் நடத்தை எனக்கு வேதனை உண்டு பண்ணியதால் தமிழ் மக்களின் நலத்தை முன்னிட்டே இது எழுத நேர்ந்தது." (தமிழ்ச் செய்தி - பொங்கல் மலர் - 16.1.65)

பெரியாரும் திராவிட இயக்கமும் தமிழுக்கும், தமிழர்க்கும் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியனவாகும். இப்போது, எச்சில் துப்பி எரிமலையை அணைக்க முயலும் முயற்சி நடந்து வருகிறது. ஒரு கட்டற்ற சிந்தனையாளர் என்கிற தன்மையில் எதனையும் காட்டமாகப் போட்டு உடைப்பது என்பது பெரியார் பின்பற்றிய நெறி. "இலக்கியம் என்று சொல்லுவதைப் பற்றி முதலாவது நாம் அதற்கு ஒரு வரையறை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இலக்கியம் என்றாலேயாரோ நான்கு பேர் பாடின கவி இருக்கிறது. ரொம்பப் பெரிய காலத்துக்கு முன்னே அற்புதமான கருத்துகளைப் புகுத்தியிருக்கிறார்கள் என்பது மாத்திரம் போதாது. இலக்கியம் என்றால் நமக்கு என்ன அதனாலே பலன்? நாம் அதைப் பின்பற்றி நடக்க முடிகிறதா? அல்லது நம்மை அது பின்பற்றும்படியாகவாவது கட்டாயப்படுத்தும்படியான சக்தி இருக்கிறதா? அத்தோடு மாத்திரமல்லாமல் அது இன்றைக்கு மக்களுக்குப் பயன்படுகிறதா? இவைகளை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும்." (இலக்கியம் வளர்ச்சிக்கு உதவ வேண்டாமா? திராவிடர் கழகம் வெளியீடு பக்கம் 23)

இந்த உரைகல்லைக் கொண்டு பார்க்கும்போது அவருக்குத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் தொடங்கி எல்லா நூல்களிலும் காணப்பட்ட சாதியம் பற்றிய அடையாளக் குறிப்புகள் ஒவ்வாமை ஊட்டின. அவருக்கே உரித்தான கடுமையான சொற்களால் அவற்றின்மீது எதிர்வினை புரிந்தார். சில குறைகளைச் சுட்டிக்காட்டினாலும் குறள் நூலை முழுமையாக ஏற்றார்.

உலக இலக்கியங்கள் யாவற்றைக் காட்டிலும் உயர்ந்து நிற்பவை நம் ஒப்பரிய இலக்கியங்களான தொல்காப்பியமும் சங்க நூல்களும், திருக்குறளும் என்பதில் எள்ளளவும் அய்யமில்லை. இவற்றின் மீது பெரியார் கொண்டிருந்த பார்வையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழின விடுதலைக்கும் தொடர்ந்து தோள் கொடுப்போம்.

(நிறைவு)


**'புரட்சிப் பெரியார் முழக்கம்' வங்கிக் கணக்கு**
**'PURATCHI PERIYAR MUZHAKAM'**

கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை,
'கரண்ட்' அக்கவுண்ட்
(Karur Vysya Bank, Adyar Branch,
Current Account)

எண் : 1257115000002041
IFSC : KVBL0001257

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896

மேற்கண்ட கணக்கில் கட்டமைப்பு நிதியை செலுத்தலாம்

# மேடை தோறும் திராவிடர் இயக்கக் கருத்தை முழங்கிய கோவை இராமநாதன் குரல் அடங்கியது



திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல் மிக்க பேச்சாளரும், திராவிடர் இயக்கக் கருத்தியலை தனது உரையின் உயிர் மூச்சாகக் கொண்டு பேசியவரும் பெரியார் இயக்கக் கழக மேடைகளில் தொடர்ந்து பங்கேற்றுப் பேசிய வருமான கோவை இராமநாதன் (87) மே 11ஆம் தேதி கோவையில் உள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார்.

திருப்பூரில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய புலவர் குழந்தை நூற்றாண்டு விழாவில் பங்கேற்றுஅவர் நிகழ்த்திய நீண்ட உரையும், பழனியில் தமிழ் வழிபாட்டை ஆதரித்து பெரியார் இயக்க மேடையில் அவர் ஆற்றிய உரையும் மிகவும் முக்கியத்துவம் பெற்றவையாகும். 1977, 1984ஆம் ஆண்டுகளில் தி.மு.க. சார்பில் சட்டமன்ற உறுப்பினராகவும், 1996இல் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தி.மு.க. தலைவர் ஸ்டாலின் மற்றும் முன்னணியினர் அவரது உடலுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்களுடன் மே 11 அன்று மாலை அவரது இல்லம் சென்று குடும்பத்துக்கு ஆறுதல் கூறினார். கடந்த 2018ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் தேதி கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகப் பொறுப்பாளர்கள், தோழர்களுடன் கோவை இராமநாதன் இல்லம் சென்று கோவை இராமநாதன் அவர்களைச் சந்தித்து அவரது குடும்பத்தினருடன் உரையாடி வந்தனர்.

இறுதி நிகழ்வில் கழக சார்பில் கழகப் பொருளாளர் துரைசாமி, நேருதாஸ், நிர்மல் குமார், சூலூர் பன்னீர்செல்வம், பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, வெங்கட், கிருஷ்ணன், இசைமதி, சபரி, அய்யப்பன், அகிலன், முத்து, ஆனந்த் ஆகியோர் பங்கேற்றனர்.

கோவை இராமநாதன் 16 வயதில் பொது வாழ்வில் ஈடுபட்டார். கோவை, மதுரை, திருச்சி, வேலூர், சென்னை, என்று தமிழகத்தில் பல்வேறு சிறைகளில் 27 முறை சிறைபட்டவர். சுமார் 6 ஆண்டுகாலம் சிறையில் கழித்தவர்! 1953இல் மும்முனைப் போராட்டம் 3 மாதம் சிறை! 1962இல் விலைவாசி மறியலில் 4 மாதம் சிறை! 1963இல் கோவையில் 144 தடை மீறல் 2 மாதம் சிறை!

1964இல் மொழிப்போரில் அரசியல் சட்டம் பிரிவு 17ஆம் பாகத்தை கொளுத்தியதற்காக 1 ஆண்டு கடுங்காவல்! 1965இல் நாஸ் தியேட்டரை தீயிட்டுக் கொளுத்தியதாக சதி வழக்கில் 3 மாதம் சிறை! மேல் முறையீட்டினால் 1966இல் 2ஆண்டு கடுங்காவல்! இதில் 10 மாதம் சிறைக்குப் பிறகு வழக்கு அரசுத் தரப்பில் திரும்பப் பெற்றதால் விடுதலை! 1976இல் "மிசா" கைதியாக. கோவை சென்னை சிறைகளில் (9+5) 14 மாதம் சிறை!

1977இல் மதுரையில் பிரதமர் இந்திராகாந்திக்குக் கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் தளபதியாக. செயல்பட்டதால் கொலை முயற்சி வழக்கில் மதுரை, கோவை சிறைகளில் 2 ஆண்டு கடுங்காவல்! 1977 முதல் 1989 வரை பல்வேறு போராட்டங்களில் 3மாதம், 2மாதம், 6வாரம் என்று சிறை.!

1989ஆம் ஆண்டு தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக இருப்பினும் மொழிப்பிரிவு "343"ஐ இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து கொளுத்தியதால் பேராசிரியர் அன்பழகன் உட்பட சட்டமன்ற பதவியை இழந்த 10 பேரில் ஒருவர்! 1991இல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதை கண்டித்து மறியல் செய்ததால் 3 மாதம் சிறை.!

இவ்வாறு 27முறை சிறைபட்டு ஆறு ஆண்டுகாலம் சிறையில் ஜனநாயகத்தையும் மொழியையும் காக்க சிறைப் பறவையாக சிறகடித்து பறந்தவர் தான் - கோவைத் தென்றல் மு. இராமநாதன்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உயர்வும் தகுதி திறமையும் பாதிக்கப்படுகிறது என்ற வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை.

"அரசு நிர்வாக அமைப்பில் உரிய முடிவு எடுக்கக்கூடிய இடத்தில் பட்டியல் - பழங்குடியினப் பிரிவினருக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியாக வேண்டும். அது தான் சட்டத்தின் முன் அனைத்து குடிமக்களும் சமம் என்ற அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமையின் உள்ளார்ந்து பொதிந்து நிற்கும் அர்த்தம்" என்று நீதிபதி டி.ஒய். சந்திரசூட் கூறியுள்ளார்.

("Establishing the position of the SCs and STs as worthy participants in the affairs of governance is intrinsic to an equal citizenship.")

மேலும் அதே நீதிபதி மற்றொரு முக்கிய கருத்தையும் தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

"சமமான வாய்ப்புகள் என்ற கோட்பாட்டுக்கு இடஒதுக்கீடு கொள்கை (எதிரானதோ) அல்லது அதிலிருந்து விலகி நிற்பதோ அல்ல; மாறாக, அது வலிமையான அர்த்தமுள்ள உண்மையான சமத்துவத்தை அமுலாக்குவதற்கான கொள்கை. எப்படி என்றால், பிறப்பு வழியாக கட்டமைக்கப்பட்ட சமுதாயத்தில் அப்படி பிறப்பு வழியில் நிர்ணயிக்கப்பட்ட சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நேர் செய்வதற்கான கொள்கை தான் இட ஒதுக்கீடு."

("Reservation are not an exception to the rule of equality of opportunity. They are rather the true fulfilment of effective and substative equality by accounting for the structural conditions into which people are born".)

- என்று நீதிபதி கூறியிருக்கிறார். பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்குவதால் தகுதி திறமை பாதிக்கப்படுகிறது என்ற வாதத்துக்கும் நீதிபதி சரியான பதிலை தீர்ப்பில் வழங்கியிருக்கிறார்.

"நிர்வாகத் திறமை என்பது ஒருவர் பணியமர்த்தப்படும்போதோ அல்லது பதவியுயர்வு பெறும் போதோ தீர்மானிக்கப்படுவது அல்ல; அவரது செயல்பாடுகளுக்குப் பிறகே முடிவு செய்யப்பட வேண்டியதாகும். ஒருவரைத் தேர்வு செய்யும் தொடக்க நிலையிலேயே அவரது நிர்வாகத் திறமையை முடிச்சுப் போட்டுவிடக் கூடாது."

("Administrative efficiency is an outcome of the actions taken by officials after they are appointed or promoted. It is not tied to the selection method itself.")

- என்று அமர்வு சார்பில் தீர்ப்பு எழுதிய நீதிபதி சந்திரசூட் சுட்டிக் காட்டியிருக் கிறார்.

ஆக நீதிபதிகள் நியமனம் பதவி உயர்வில் இடஒதுக்கீடு - 7 தமிழர் விடுதலைக்கான தடை நீக்கம் - என்று உச்சநீதிமன்றம் கடந்த வாரம் வழங்கிய தீர்ப்புகளும் அறிவிப்புகளும் வரவேற்றுப் பாராட்டக் கூடியவை.

# மே 25இல் மேட்டூரில் நாத்திகர் விழா: சென்னை உயர்நீதி மன்றம் அனுமதி

நாத்திகர் பேரணி தொடர்பாகத் திராவிடர் விடுதலைக்கழகம் தொடர்ந்த வழக்கில், பேரணி நடத்த அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது சென்னை உயர் நீதிமன்றம்.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சென்னை உயர்நீதிமன்றத்தில் நாத்திகர் விழாவுக்கு அனுமதி மறுத்ததை எதிர்த்து மனு தாக்கல் செய்தார். ஏப்ரல் மாதம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக சேலம் மேட்டூரில் நாத்திகர் பேரணி மற்றும் விழா நடத்தவிருப்பதாகவும், அதற்கு அனுமதி கோரி மார்ச் மாதம் கருமலைக் கூடல் காவல் நிலையத்தில் மனு அளித்ததாகவும், கருமலைக்கூடல் காவல் நிலைய ஆய்வாளர் மாவட்டத் தேர்தல் அதிகாரியிடம் அனுமதி பெற வேண்டுமென்று கோரித் தங்களது மனுவை நிராகரித்தார் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

கடந்த ஏப்ரல் 10ஆம் தேதியன்று இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்திருப்பதாகவும் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரி சட்டத்துக்கு உட்பட்டு முடிவெடுக்க வேண்டுமென்று கூறி உத்தரவிட்டது.

ஆனால், தங்களின் மனுவை இதுவரை பரிசீலிக்கவில்லை என்றும், நீதிமன்றம் தங்களின் பேரணிக்கு அனுமதி அளித்து உத்தரவிட வேண்டும் என்றும், மீண்டும் சென்னை உயர் நீதிமன்றத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

மே 9 அன்று இந்த மனு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, நாத்திகர் பேரணிக்கும் பொதுக் கூட்டத்துக்கும் அனுமதி அளித்து நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து, வரும் 25ஆம் தேதியன்று நாத்திகர் பேரணி சேலம் மேட்டூரில் நடைபெறவுள்ளது.

நாத்திகம் என்பதும் அந்தத்தத்துவத்தில் நம்பிக்கை கொண்டோரின் ஒரு சிந்தனை மரபு தான். அதற்குத் தடைப் போட தேவையில்லை என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளார். வழக்கறிஞர் திருமூர்த்தி கழக சார்பில் வாதிட்டார்.


## வெளிவந்து விட்டது
## 'நிமிர்வோம்' – மே 2019 இதழ்

- தலையங்கம் - வடநாட்டார் ஆதிக்கம்
- பெரியார் தமிழ்நாட்டுக்கு எதிரியா?
- 'அய்.எஸ்.அய்.எஸ்.' - 'இந்து சேனை'களின் வெடிகுண்டு கலாச்சாரம்
- இந்தி எதிர்ப்புக்கு தமிழர் படை நடத்திய பட்டுக்கோட்டை அழகிரி
- இராமன் அயோத்தியில் பிறந்தானா?
- செம்மொழித் தமிழ் மீது நஞ்சுக் கக்கும் நாகசாமி (2)
- காதலில் கவனம் தேவை!
- லெமூரியா (குமரிக் கண்டம்) என்பது ஒரு கற்பனை!




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th May 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN